இந்து சமய அறநிலையத்துறை

## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்)

# கந்தசஷ்டித் திருவிழா அழைப்பிதழ் 2025




பெறுநர்

______________________________

______________________________


______________________________

இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்)

# கந்தசஷ்டித் திருவிழா அழைப்பிதழ்

## 2025



## கந்த விரத ஆறாம் நாள் திருவிழா

நாள் : 27.10.2025 திங்கட்கிழமை

உ
செந்தில் ஆண்டவர் துணை

இந்து சமய அறநிலையத்துறை

## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
## திருச்செந்தூர். (திருச்சீரலைவாய்)

பசலி 1435

# 2025 ஆம் ஆண்டு
# கந்தசஷ்டித் திருவிழா அழைப்பிதழ்

"வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே செந்தில் நகர்
சேவகா என்று திருநீ(று) அணிவார்க்கு
மேவ வாராதே வினை"

ஆறுபடை வீடுறை அழகன், ஆறமர்ச் செல்வன், ஆதிசிவன் மைந்தன் அழகுமிகு பாலன் அமர்ந்து அருளாட்சி செய்து வரும் படைவீடு ஆறினுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுவது திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூராகும். "கயிலை மலையனைய செந்திற்பதியின்" தொன்மை பற்றியும் தொல்லுலக ஆண்டவனை பற்றியும், புலவர்கள் பலர் பாடிப் பரவியுள்ளனர்.

"திருமணி விளக்கின் அலைவாய்" என அகநானூறும் "வெண்டலைப் புணரி அலைக்குஞ்செந்தில்" எனப் புறநானூறும், "சீர்கெழு செந்தில்" என சிலப்பதிகாரமும், "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீரலைவாய்" என திருமுருகாற்றுப்படையும் செந்திலம்பதியின் புகழ்பாடுகின்றன.

"முருகனே செந்தில் முதல்வனே, உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்" "காக்கக் கடவிய நீ" எனும் பண்ணார்ந்த பாடல்களை நக்கீரர் பாடி நலம் பெற்ற ஊர். "செந்தில் மாமலையுறும் செங்கல் வராயன்" என பாலன் தேவராய சுவாமிகளாலும் "தேவர் சிகாமணி, சித்தர் சிகாமணி, தெள்ளறிவுத் தூவர் சிகாமணி, யோகர் சிகாமணி, தோமிலடகவி நாவர் சிகாமணி, நாதர் சிகாமணி, நண்ணுமென்னுள் மேவு சிகாமணி செந்தியில் வாழ்வடி வேலவனே." எனச் செந்திற்கலம்பகமும், குமரகுருபரரின் "கந்தர் கலிவெண்பாவும்" பகழிக் கூத்தரின் "திருச்செந்தூர் பிள்ளைத்தமிழும்" ''கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே'' எனும் அருணகிரிநாதரின் திருப்புகழும், நந்தூர் அலைவாயில் செந்தூர் முருகனை கந்துதல் இல்லாத சந்தமார்த்தமிழில் சிந்தை மகிழப்பாடிப் பெற்ற பழம் பனுவல்களாகும்.

அகத்திய முனிவர் வழிபாடாற்றி அருள்பெற்ற ஊர், ஆதிசங்கரர் வழிபட்டு உடற்பிணி நீங்கப் பெற்று "சுப்பிரமணிய புஜங்கம்" என்ற தெய்வ மணங்கமழும் சிறந்த பாமாலை பாடியருளிய தலம் இது.

இத்தகைய புகழ் மணக்கும் இத்திருக்கோயிலில், நன்மை வெல்ல, தீமை அகல சூரபத்மனை வதைத்து வையத்தின் மக்கள் துயர் தீர்த்த முருகப் பெருமானின் **"கந்தசஷ்டித் திருவிழா"** 22.10.2025 அன்று தொடங்கி 02.11.2025 அன்று முடிவுறுகிறது. **"சூரசம்ஹாரம்"** 27.10.2025 திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் சூரசம்ஹாரத்திற்கு சுவாமி எழுந்தருளல், நடைபெற உள்ளது. முருகனடியார்கள் அனைவரும் வருகைபுரிந்து நோன்பு நோற்று கந்தசஷ்டி வேள்விச்சாலை பூஜையில் கலந்து கொண்டு வெள்ளி, செம்பு இரட்சைத் தகடுகள் அணிந்து செந்தில் வாழ்க் கந்தனின் திருவருள் பெற்றுய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

பேராதரிக்கும் அடியார்தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேரும் கொடுக்கும் "பிள்ளைப் பெருமானை" தொழுவதால் பேராயிரம் பெற்று பெருவாழ்வு பெறுவர். எல்லா நலன்களும் ஈந்து மகிழ்வான் செந்தூர் முருகன். எனவே, "செந்திலடைந்து செழுங்கடலாடி, செந்திற்பதிபுரக்கும் செவ்வேளை சிந்தை நைந்துருகி சந்தமும் தொழ, திரை கடல் முழங்கும் செந்திலாதிபன் திருவருள் வாரிதியில் திளைத்துக்களித்திட திரண்டு வாரீர் "திருச்செந்தூர் நோக்கி" என அன்புடன் மீண்டும் அழைக்கின்றோம்.

க. ராமு, பி.ஏ.,பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்

இரா. அருள்முருகன்
தக்கார்

"வாழ்க ! எல்லா வளங்களும் நலன்களும்.
சூழ்க ! ஆயுளும் சுகமும் இனிதே
சூழ் கதிர் மதியுள வரை தொலையாச் செல்வமும்.
வாழ்க ! பல்லூழி வாழ்க செவ்விதினே"

# 2025 – கந்தசஷ்டித் திருநாள்களின் விவரம்

## ஐப்பசி - 5 (22.10.2025) புதன்கிழமை 1-ஆம் திருநாள்

காலை : 5.30 மணிக்குமேல் 6.00 மணிக்குள் துலா லக்னத்தில் அருள்மிகு ஜெயந்திநாதப் பெருமான் யாகசாலைக்கு எழுந்தருளல்.

காலை : 7.00 மணியளவில் யாகசாலை பூஜை ஆரம்பம்.

நண்பகல் : 12.00 மணியளவில் யாகசாலையில் தீபாராதனை.

பகல் : 12.45 மணிக்குமேல் சப்பரத்தில் அருள்மிகு ஜெயந்திநாதர் யாகசாலையில் இருந்து எழுந்தருளி வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடனும் மேளவாத்தியங்களுடனும், சண்முகவிலாசம் சேர்தல், பின்பு தீபாராதனை.

மாலை : 4.00 மணிக்குமேல் 4.30 மணிக்குள் திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேக அலங்காரமாகி கிரிவீதி உலா வந்து திருக்கோயில் சேர்தல்.

## 2-ஆம் திருநாள் முதல் 5-ஆம் திருநாள் முடிய ஐப்பசி-6 (23.10.2025) வியாழக்கிழமை முதல் ஐப்பசி - 9 (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முடிய

காலை : 7.00 மணியளவில் யாகசாலை பூஜை ஆரம்பம்.

நண்பகல் : 12.00 மணியளவில் யாகசாலையில் தீபாராதனை.

பகல் : 12.45 மணிக்குமேல் சப்பரத்தில் அருள்மிகு ஜெயந்திநாதர் யாகசாலையில் இருந்து எழுந்தருளி வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடன் மேளவாத்தியங்களுடனும், சண்முகவிலாசம் சேர்தல், பின்பு தீபாராதனை.

மாலை : 4.00 மணிக்குமேல் 4.30 மணிக்குள், திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேக அலங்காரமாகி கிரிவீதி உலா வந்து திருக்கோயில் சேர்தல்.

## ஐப்பசி-10 (27.10.2025) திங்கட்கிழமை 6-ஆம் திருநாள் (சூரசம்ஹாரம்)

காலை : 6.00 மணியளவில் யாகசாலை பூஜை ஆரம்பம்.

நண்பகல் : 12.00 மணியளவில் யாகசாலையில் தீபாராதனை.

பகல் : 12.45 மணிக்குமேல் சப்பரத்தில் அருள்மிகு ஜெயந்திநாதர் யாகசாலையில் இருந்து எழுந்தருளி வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடன் மேளவாத்தியங்களுடனும், சண்முகவிலாசம் சேர்தல் பின்பு தீபாராதனை.

பகல் : 2.00 மணிக்குமேல், திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேக அலங்காரம் நடைபெறுதல்.

### அருள்மிகு ஜெயந்திநாதர் சூரசம்ஹாரத்திற்கு எழுந்தருளல் மாலை 4.30 மணியளவில் நடைபெறும்

சூரசம்ஹாரம் முடிந்த பின்பு சந்தோச மண்டபத்தில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் அலங்காரமாகி தீபாராதனை நடைபெற்று கிரி பிரகாரம் உலா வந்து திருக்கோயில் சேர்தல். இரவு 108 மகாதேவர் சந்நிதி முன்பு சுவாமிக்கு சாயா அபிஷேகம் முடிவுற்றபின் சஷ்டி பூஜைத் தகடுகள் கட்டுதல்.

## ஐப்பசி - 11 (28.10.2025) செவ்வாய்க்கிழமை 7-ஆம் திருநாள் (திருக்கல்யாணம்)

அதிகாலை : 5.30 மணிக்கு தெய்வானை அம்பாள் சேர்க்கையில் இருந்து தபசுக்கு புறப்படுதல்.

மாலை : 6.00 மணியளவில் அம்பாளுக்கு சுவாமி காட்சி அருளித் தோள்மாலை மாற்றுதல்.

இரவு : **11.00 மணிக்குமேல் அருள்மிகு தெய்வானை அம்பாளுக்கும் சுவாமிக்கும் திருக்கல்யாண வைபவம்,** திருக்கோயில் வளாகம் மேலக்கோபுரம் முன்பு அமைந்துள்ள மண்டபத்தில் வைத்து நடைபெறுதல்.

## ஐப்பசி - 12 (29.10.2025) புதன்கிழமை 8-ஆம் திருநாள்

இரவு : அருள்மிகு குமரவிடங்க பெருமான் தங்கமயில் வாகனத்திலும் அருள்மிகு தெய்வானை அம்பாள் பூம்பல்லக்கிலும், பட்டினப் பிரவேசம், திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தல்.

## 9-ஆம் திருநாள் முதல் 11-ஆம் திருநாள் முடிய
## ஐப்பசி-13 (30.10.2025) வியாழக்கிழமை முதல் ஐப்பசி - 15 (01.11.2025) சனிக்கிழமை முடிய

தினமும் : மாலை 6.00 மணியளவில் திருக்கல்யாண மண்டபத்தில் அருள்மிகு குமரவிடங்க பெருமான் தெய்வானை அம்பாளுடன் ஊஞ்சல் காட்சி நடைபெறும்.

## ஐப்பசி - 16 (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை 12-ஆம் திருநாள்

மாலை : 4.30 மணிக்குமேல் மஞ்சள் நீராட்டு, சுவாமியும் அம்பாளும் திருவீதி உலா வந்து திருக்கோயில் சேர்தல்.

## திருவிழா நாள்களில் திருக்கோயில் திருநடை திறப்பு விவரம்

22.10.2025 அதிகாலை 1.00 மணிக்கு நடைதிறந்து 1.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

23.10.2025 முதல் 26.10.2025 முடிய அதிகாலை 3.00 மணிக்கு நடைதிறந்து 3.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

27.10.2025 அதிகாலை 1.00 மணிக்கு நடைதிறந்து 1.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

28.10.2025 அதிகாலை 3.00 மணிக்கு நடைதிறந்து 3.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

இதர நாள்களில், தினந்தோறும் அதிகாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை தொடர்ந்து நடைதிறந்திருக்கும்.

27.10.2025 மாலை சூரசம்ஹாரம் முடிவுற்ற பின்னர் திருக்கோயில் விடுதிகள் மற்றும் அலுவலகத்தில் வேள்விச்சாலை பூசையில் வைக்கப்பட்ட வெள்ளித்தகடுகள், செம்புத்தகடுகள் விற்பனை செய்யப்படும்.

வெள்ளித்தகடு விலை ரூ. 200.00 செம்புத்தகடு விலை ரூ. 50.00

யாகசாலை ஹோமப் பொருள்கள் உபயம் : தலைவர், சுவாமி திரு. அத்வைதானந்தா உழவாரப் பணிக்குழு, திருப்பரங்குன்றம்.
தலைவர், சுவாமி திரு. சுப்பிரமணியசுவாமி சேவா சமிதி, திருச்செந்தூர்.

யாகசாலை வர்ணம் உபயம் : திரு. செந்தில் மாரியப்பன், டேட்டோ கார்ப் டிராபிக் பிரைவேட் லிமிடெட் பெங்களூர் - 60

தேவாரத் திருமுறை இன்னிசை : 22.10.2025 முதல் 27.10.2025 வரை திருக்கோயில் தேவார ஓதுவார்களின் திருமுறை இன்னிசை நடைபெறும்.

## எதிர்வரும் மாசித் திருவிழா ஆரம்பம் 21.02.2026 மாசி மாதம் 9-ஆம் நாள் சனிக்கிழமை

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கப்பட்ட திருக்கோயில் அன்னதானத்திட்டம்

| திருக்கோயில் விவரம் | நாள் 1-க்கு | நிரந்தரவைப்பு நிதித்திட்டம் |
|---|---|---|
| 1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் | பக்தர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப நன்கொடை செலுத்தலாம் | |
| 2. அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில், திருச்செந்தூர் | ரூ.3,500/- | ரூ.60,000/- |
| 3. அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம் | ரூ.1,750/- | ரூ.30,000/- |
| 4. அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில், நாசரேத் | ரூ.1,750/- | ரூ.30,000/- |

குறிப்பு : நிரந்தர வைப்புநிதி திட்டத்தில் நன்கொடை செலுத்தும் பக்தர்களுக்கு, மேற்படி தொகை முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையை வைத்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப வருடத்தில் ஒரு நாள் அன்னதானம் வழங்கப்படும்.

இத்திருக்கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்ட கலையரங்கில் 22.10.2025 முதல் 27.10.2025 முடிய தினசரி காலை 5.00 மணிக்கு திருமுறை இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும். காலை 6.00 மணிக்கு "ஓம் சரவணபவாய நம" பாராயணம் செய்தல் திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர் அவர்களால் நடத்தப்படும். காலை 7.00 மணிக்கு கந்தர் கலிவெண்பா முற்றோதுதல் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளாசியுடன் தென்மண்டல கட்டளை விசாரணை முனைவர் ஸ்ரீமத் திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் முன்னிலையில் நடைபெறும்.

## 2025 கந்தசஷ்டித் திருவிழா கலையரங்க நிகழ்ச்சி நிரல்

### 22.10.2025 புதன்கிழமை 1-ஆம் திருவிழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : | "தாயுமானவர்" |
| காலை | 09.00 | மணி | திரு. சு.முத்தரசு, குலசை. | பொருள் : | "உதித்தனன் உலகம் உய்ய" |
| காலை | 10.00 | மணி | திருமதி. ந.விஜயலெட்சுமி, காரைக்கால். | பொருள் : | "பக்திக்குரிய மெய்ப்பாடுகள்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : | "அருணை வள்ளலின் வாழ்வும் வாக்கும்" |
| பகல் | 12.00 | மணி | திருமதி. லதா கதிர்வேல், சென்னை. | பொருள் : | "மயில் விருத்தம்" |
| பகல் | 01.00 | மணி | திரு. ஆறு திருமுருகன், யாழ்ப்பாணம். | பொருள் : | "கந்தபுராண அரங்கேற்றம்" |
| பகல் | 02.00 | மணி | அரிமா.பாரதி கண்ணன், வி.கே.புரம் | பொருள் : | "உதித்தனன் உலகம் உய்ய" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | இன்னிசை : | "ஓம் சரவணபவாய நம"-பாராயணம் |
| மாலை | 04.00 | மணி | டாக்டர்.S.வைத்தியநாதன், கடலூர் | பொருள் : | "அற்புத திருப்புகழும் அருணகிரி நாதரும்" |
| மாலை | 05.00 | மணி | விஜய் டி.வி.புகழ் திரு.கோ.வெங்கட்ஜி,சென்னை. | பொருள் : | "அடியேற்கு முன்னின்று அருள்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : | "கந்தர் அனுபூதி " |
| இரவு | 07.00 | மணி | வாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி | | |
| | | | திருமதி. தேச மங்கையர்க்கரசி, சென்னை. | பொருள் : | "முருகன் திரு அவதாரம்" |
| இரவு | 08.00 | மணி | திருமதி. இளம்பிறை மணிமாறன், தூத்துக்குடி. | பொருள் : | "குருவாய் வருவான் குகன்" |
| இரவு | 09.00 | மணி | தஞ்சை திருமதி. ர. புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : | "திருப்புகழ் இன்பம்" |
| இரவு | 10.00 | மணி | கலைமாமணி கிராமிய இசை கலாநிதி பாடகர். வேல்முருகன், சென்னை. | இன்னிசை : | "பக்தி இன்னிசை" |

### 23.10.2025 வியாழக்கிழமை 2-ஆம் திருவிழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : | "அப்பர் தேவாரம்" |
| காலை | 09.00 | மணி | திரு. சு.முத்தரசு, குலசை. | பொருள் : | "சும்மா இரு" |
| காலை | 10.00 | மணி | திரு. முருக இளங்கோ, சுத்தமல்லி. | பொருள் : | "கந்தர் அனுபூதி" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : | "சீர்கெழு செந்தில்" |
| பகல் | 12.00 | மணி | திருமதி. மீனாட்சி பிரியாந்த், மதுரை. | பொருள் : | "கந்தன் என்று சொல்ல வல்வினையும் கலங்குமே" |
| பகல் | 01.00 | மணி | திரு. ஆறு திருமுருகன், யாழ்ப்பாணம் | பொருள் : | "செந்தூர் புராணமும் ஈழநாடும்" |
| பகல் | 02.00 | மணி | திருமதி. லதா கதிர்வேல், சென்னை. | பொருள் : | "வேல் விருத்தம்" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | இன்னிசை : | "ஓம் சரவணபவாய நம"-பாராயணம் |
| மாலை | 04.00 | மணி | விஜய் டி.வி.புகழ் திரு.கோ.வெங்கட்ஜி,சென்னை. | பொருள் : | "அடியார்க்கு நல்ல பெருமாள்" |
| மாலை | 05.00 | மணி | இறையருட் செல்வி.H.தியா, சென்னை. | பொருள் : | "பக்தி இன்னிசை' |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : | "கந்தர் அனுபூதி" |
| இரவு | 07.00 | மணி | வாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி | | |
| | | | திருமதி. தேச மங்கையர்க்கரசி, சென்னை. | பொருள் : | "சிவ உபதேசம்" |
| இரவு | 08.00 | மணி | திருமதி. இளம்பிறை மணிமாறன், தூத்துக்குடி. | பொருள் : | "அடியார்க்கு நல்ல பெருமாள்" |
| இரவு | 09.00 | மணி | தஞ்சை திருமதி. ர.புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : | "திருப்புகழ் இன்பம்" |
| இரவு | 10.00 | மணி | கலைமாமணி கிராமிய இசை கலாநிதி | | |
| | | | பாடகர். திரு. வேல்முருகன், சென்னை. | இன்னிசை : | "பக்தி இன்னிசை" |

### 24.10.2025 வெள்ளிக்கிழமை 3-ஆம் திருவிழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : | "திருவாசகம்" |
| காலை | 09.00 | மணி | திரு. சு.முத்தரசு, குலசை. | பொருள் : | "ஆன்மிக அமுதம்" |
| காலை | 10.00 | மணி | திருமதி. சித்ரா கணபதி, மதுரை. | பொருள் : | "சேவற் கொடியோனே போற்றி" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : | "சுடர் இலைய வெள்வேல்" |
| பகல் | 12.00 | மணி | திரு. S.திருமலைச்சாமி, பழனி | பொருள் : | "கந்தனே கண்கண்ட தெய்வம்" |
| பகல் | 01.00 | மணி | திரு. ஆறு திருமுருகன், யாழ்ப்பாணம் | பொருள் : | "நல்லூர் கந்தனும் வேல் வழிபாடும்" |
| பகல் | 02.00 | மணி | திருமதி. ஜா.கோமதி திருநாவுக்கரசு | பொருள் : | "கருணை கடல் கந்தன்" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | இன்னிசை : | "ஓம் சரவணபவாய நம"-பாராயணம் |
| மாலை | 04.00 | மணி | திரு.பொன் வேலுமயில்,திருநெல்வேலி. | பொருள் : | "அனுபூதி முருகன்" |
| மாலை | 05.00 | மணி | விஜய் டி.வி.புகழ் திரு.கோ.வெங்கட்ஜி,சென்னை. | பொருள் : | "மலர்ந்தது மயிலும் சேவலும்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி | பொருள் : | "கந்தர் அனுபூதி" |
| இரவு | 07.00 | மணி | வாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி | | |
| | | | திருமதி. தேச மங்கையர்க்கரசி, சென்னை. | பொருள் : | "வீரபாகு தூது" |
| இரவு | 08.00 | மணி | திருமதி. இளம்பிறை மணிமாறன், தூத்துக்குடி. | பொருள் : | "புலவர்கள் போற்றிய புண்ணியன்" |
| இரவு | 09.00 | மணி | தஞ்சை திருமதி. ர.புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : | "திருப்புகழ் இன்பம்" |
| இரவு | 10.00 | மணி | கலைமாமணி கிராமிய இசை கலாநிதி | | |
| | | | பாடகர். திரு. வேல்முருகன், சென்னை. | இன்னிசை : | "பக்தி இன்னிசை" |

### 25.10.2025 சனிக்கிழமை 4-ஆம் திருவிழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : | "சுந்தரர் தேவாரம்" |
| காலை | 09.00 | மணி | திரு. சு.முத்தரசு, குலசை. | பொருள் : | "அன்பர் பூசை" |
| காலை | 10.00 | மணி | திரு. க.பிரேம்குமார், தூத்துக்குடி. | பொருள் : | "செந்தூர் நண்ணிய செந்தூரான்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : | "முத்தமிழ் முதல்வன்" |
| பகல் | 12.00 | மணி | கலை இளமணி.மாஸ்டர்.வைபவ் மகேஷ், சென்னை. | பொருள் : | "சங்கீத சொற்பொழிவு" |
| பகல் | 01.00 | மணி | திரு. ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணம் | பொருள் : | "கந்த சஷ்டி விரத மகிமை" |
| பகல் | 02.00 | மணி | பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருதேவ் வாழும் கலை சார்பாக | | |
| | | | சுவாமி ஸ்ரீதேஜ், பெங்களூரு. | பொருள் : | "தெய்வீக சத்சங்கம்" |
| மாலை | 04.00 | மணி | திரு.பொன்வேலுமயில், திருநெல்வேலி. | பொருள் : | "திருப்புகழ் அழகன்" |
| மாலை | 05.00 | மணி | விஜய் டி.வி.புகழ் திரு.கோ.வெங்கட்ஜி,சென்னை. | பொருள் : | "கலியுக கடவுள் கந்தன்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : | "கந்தர் அனுபூதி" |
| இரவு | 07.00 | மணி | வாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி | | |
| | | | திருமதி. தேச மங்கையர்க்கரசி, சென்னை. | பொருள் : | "சூரபதுமன் பெருவாழ்வு" |
| இரவு | 08.00 | மணி | திருமதி. இளம்பிறை மணிமாறன், தூத்துக்குடி. | பொருள் : | "வள்ளலார் வாழ்த்திய வள்ளல்" |
| இரவு | 09.00 | மணி | தஞ்சை திருமதி. ர.புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : | "திருப்புகழ் இன்பம்" |
| இரவு | 10.00 | மணி | கலைமாமணி கிராமிய இசை கலாநிதி | | |
| | | | பாடகர். திரு.வேல்முருகன், சென்னை. | இன்னிசை : | "பக்தி இன்னிசை " |

## 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை 5-ஆம் திருவிழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : | "கந்தர் அனுபூதி" |
| காலை | 09.00 | மணி | திரு. சு. முத்தரசு, குளசை | பொருள் : | "கந்தபுராணத்தில் வாழ்வியல் கருத்துக்கள்" |
| காலை | 10.00 | மணி | செல்வி.சே.சி.யாழினி, செல்வி.செ.சி.ராமப்பிரியா,திருநெல்வேலி. | பொருள் : | "அறுபடை அழகன்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : | "திருவடி சரணம்" |
| பகல் | 12.00 | மணி | திரு. கு.கதிரேசன், திருச்செந்தூர். | பொருள் : | "முருகனே முதல்வன்" |
| பகல் | 01.00 | மணி | திரு. ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணம். | பொருள் : | "அன்னதானக் கந்தனின் அற்புதம்" |
| பகல் | 02.00 | மணி | திரு. M.R.சிவசங்கர், குளச்சல். | பொருள் : | "வளரும் முருகன் அருள்" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | இன்னிசை : | "ஓம் சரவணபவாய நம"-பாராயணம் |
| மாலை | 04.00 | மணி | திருமதி.சங்கரேஸ்வரி ஆறுமுகம், சங்கரன்கோவில். | பொருள் : | "நமக்கொரு மெய்த்துணையே" |
| மாலை | 05.00 | மணி | விஜய் டி.வி.புகழ் திரு.கோ.வெங்கட்ஜி,சென்னை. | பொருள் : | "ஆனந்த தரிசனம்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி | பொருள் : | "கந்தர் அனுபூதி" |
| இரவு | 07.00 | மணி | வாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி திருமதி. தேச மங்கையர்க்கரசி, சென்னை. | பொருள் : | "வள்ளி தெய்வானை திருமணம்" |
| இரவு | 08.00 | மணி | திருமதி. இளம்பிறை மணிமாறன், தூத்துக்குடி | பொருள் : | "அருணகிரிக்கு அருளிய ஆறுமுகன்" |
| இரவு | 09.00 | மணி | தஞ்சை திருமதி. ர.புவனேஸ்வரி. திருப்பூர் | பொருள் : | "திருப்புகழ் இன்பம்" |
| இரவு | 10.00 | மணி | கலைமாமணி கிராமிய இசை கலாநிதி பாடகர் திரு.வேல்முருகன், சென்னை. | இன்னிசை : | "பக்தி இன்னிசை" |

## 27.10.2025 திங்கட்கிழமை 6-ஆம் திருவிழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : | "சம்பந்தர் அலங்காரம்" |
| காலை | 09.00 | மணி | தெரிசை திரு.பொ.அய்யப்பன், ஆறுமுகநேரி | பொருள் : | "அருணகிரிநாதரின் அற்புதத்தமிழ்" |
| காலை | 10.00 | மணி | திரு. M.R.சிவசங்கர், குளச்சல். | பொருள் : | "முருகனின் முகவரி" |
| காலை | 11.00 | மணி | திரு. கு.கதிரேசன், திருச்செந்தூர். | பொருள் : | "முருகனே அழகன்" |
| பகல் | 12.00 | மணி | திருமதி.சங்கரேஸ்வரி ஆறுமுகம், சங்கரன்கோவில். | பொருள் : | "கடம்ப மரமும் கந்த வேலும்" |
| பகல் | 01.00 | மணி | முருகனடிமை. அ.வீ.பா. மோகனசுந்தரம், திருச்செந்தூர். | பொருள் : | "கந்தன் கருணை" |
| பகல் | 02.00 | மணி | திருமதி. ஜா.கோமதி திருநாவுக்கரசு | பொருள் : | "சூரன் பெற்ற பெருவாழ்வு" |
| மாலை | 03.00 | மணி | திரு. V.பாமணி, திருநெல்வேலி. | பொருள் : | "தவத்தின் மேன்மை" |

## திருக்கல்யாணம் 28.10.2025 செவ்வாய்க்கிழமை 7-ஆம் திருவிழா (கலையரங்கம்)

| | |
|---|---|
| திருக்கல்யாண சிறப்பு நாதஸ்வர இன்னிசை | : கலைவளர்மணி விசலூர் திரு.V.B.மருதுபாண்டி |
| திருக்கல்யாண சிறப்புத்தவில் | : திருக்கோவிலூர் திரு.S.தினேஷ், செந்தில் திரு. E.முத்துவேல் சுரேஷ் |
| சிறப்புத்தவில் நாதஸ்வர உபயம் | : திரு.வி. சிற்றரசு ராயன், கரூர். |
| திருக்கல்யாண பொருள்கள் உபயம் | : திரு. ச. சங்கர ராமசாமி ஆதித்தன், காயாமொழி. |

திருக்கல்யாண சீர்வரிசை பொருள்கள், திருக்கல்யாண தாம்பூலம் மொய் பைகள் மற்றும்
திருக்கல்யாண நிகழ்வுகள் LED யில் ஒளிபரப்பு உபயம்
திரு.V.A.பாலமுருகன் – திருமதி.B.ராணி குடும்பத்தினர்கள், கோவில்பட்டி

**சூரசம்ஹார நேரடி வர்ணனை இயல் இசையுடன்:** வாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி
திருமதி. **தேச மங்கையர்க்கரசி மற்றும் குழுவினர்,** சென்னை.

**கந்தசஷ்டித் திருவிழா - யாகசாலை பூஜை, சூரசம்ஹாரம் மற்றும் திருக்கல்யாண நிகழ்வுகளை அகன்ற திரை மற்றும் LED TV மூலம் ஒளிபரப்பு உபயம்: " நியூஸ் 7 " தமிழ்த் தொலைக்காட்சி நிறுவனம்**

## கந்தசஷ்டித் திருவிழா நிகழ்ச்சி உபயதாரர்கள்

* திரு. அ.வே.மா. மாரிமுத்து நாடார் அன் சன்ஸ் குடும்பத்தார்கள்.
  ஏ.வி.எம்.நகை மாளிகை, பவுன் மார்க் தேங்காய் எண்ணெய் வியாபாரம், தூத்துக்குடி.
* திருமதி. சுஜாதா பாலசுப்பிரமணியம், தலைவர், ஜி.கே.எம்.பொறியியல் கல்லூரி, கல்வி குழுமம், சென்னை
* திருமதி. கற்பகவள்ளி சரவணப்பாண்டியன், சிவசக்தி சீட்டு நிறுவனம், பரமன்குறிச்சி.
* திருமதி. ந. செந்தாமரை, ஜே.கே.கே.ரெங்கம்மாள் அறக்கட்டளை, குமாரபாளையம்.
* திரு. எஸ். யோகநாதன், லண்டன்.
* திரு. சிவ. இராம. நடராஜமுதலியார் குடும்பத்தார்கள், அம்பாசமுத்திரம்.
* திரு. சி.ரா.ஆ.பெ. மாரி, மற்றும் திருமதி. மா. சுந்தரி, சி.ராமையா பிள்ளை அறக்கட்டளை, பச்சேரி.
* திரு. யோ.ராஜமாணிக்கம் குடும்பத்தினர், அரசு ஒப்பந்தக்காரர், மதுரை.
* திரு. கி.ராஜேஷ் – ஆனந்தி தம்பதியர், மூலைப்பொழி.
* திரு. கா.ச.தவமணி, நியூ லைப் கேர் நிறுவனம். இராஜபாளையம்.
* திரு. வ.ந.ராஜ், திரு.வ.ந.சங்கர், தோட்டப்பாளையம் - வேலூர்.
* திரு. சண்முகம், அரசு வனத்துறை ஒப்பந்தக்காரர், வேல் முருகன் மனைகள் விற்பனையகம், வேலூர்.
* திரு. சி. ராஜபாண்டி, திருமதி. அற்புதமணி , உதிரமாடன் குடியிருப்பு.
* திரு. ச. பாலமுருகன் மற்றும் திரு. சு. ராம்குமார், சங்கரன்கோவில்.
* கொம்மடிக்கோட்டை, திரு. சு.வ. திருஞானம், வாலை குரு ஸ்டோர், சென்னை.
* திரு. இரா. கோதண்டம், கார்த்திக் தொழிலகம், கீழ்க்கட்டளை, சென்னை
* திரு. சா. கல்யாணகுமார் மற்றும் குமாரர்கள், பேயன்விளை.
* திரு. வி. சண்முகவடிவேலு, நன்னிலம், திருவாரூர்.
* திரு. முத்து செல்வம் குடும்பத்தினர், சேலம்.
* டாக்டர். திரு. அ.அங்கப்பன் (எ) அருண், தேவர் பிலிம்ஸ் குடும்பத்தார், மேட்டூர் அணை.
* திரு. நா.கு. மணி, நாராயணன் அன் சன்ஸ், சின்னமனூர்.
* திரு. இரா. துரை பெயிண்டர் குமாரர் திரு. து. செல்வ ரமேஷ், திருநெல்வேலி.
* திரு. ஜே.ஜோதிபாஸ், ஜோதி நகைமாளிகை, உடன்குடி
* திரு. பி. நரசிங்க பத்மாவதி குடும்பத்தார், திண்டுக்கல்
* திரு. ம.அ.இராமசாமி, ஸ்ரீ குமார் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேசன், சேலம்
* ஜெயந்திநாதர் எண்டர்பிரைசஸ், சென்னை.
* திரு. இரா.தியாகமோகன் குடும்பத்தினர், எம்.ஜே.எப்.சத்திரப்பட்டி.
* திரு.V.சத்தியமூர்த்தி ராஜன், அமைந்தகரை, சென்னை.
* டாக்டர். M.S.கிஷோர்-ஆர்த்தி, பிரணவ் ஸ்கேன் சென்டர், நாகர்கோவில்.
* திரு.வேம்பன்-கல்யாணி, வேலன் உ ஸ்டால், திருச்செந்தூர்.

**கந்தசஷ்டித் திருவிழா ஆறு நாள்களும் வேள்விச்சாலை பூஜை கட்டளைதாரர் :**

- சென்னை தேவர் பிலிம்ஸ், தண்டாயுதபாணி பிலிம்ஸ் உரிமையாளர்
  தெய்வத்திரு. ம.மு.அ. சின்னப்பாத்தேவர் அவர்கள் திருக்குமாரர் திரு. ம.மு.அ.சி. தண்டாயுதபாணி

**கந்தசஷ்டித் திருவிழா ஆறு நாள்களும் வேள்விச்சாலை பூஜை செலவுகள் உபயம் :**

- திரு. ம.மு.அ. மாரியப்பத்தேவர், திருமதி. மா. தனலட்சுமி அவர்கள் திருக்குமாரர்கள்
  திரு. மா. சரவணன், திரு. மா. குமரன், சென்னை.
- திரு. மா. சரவணன் அவர்கள் குமாரர், திரு. ச. விக்னேஷ், சென்னை
- தலைவர், ஸ்பிக் நிறுவனம், தூத்துக்குடி மற்றும் சென்னை.

**கந்தசஷ்டித் திருவிழா யாகசாலை பூ அலங்காரம் உபயம் :**

- திரு.வி.ராமபூபதி - ஜீவா, திரு.ருத்திரமூர்த்தி - ஜெயலட்சுமி, திரு.ஆர்.பி.அஜித்குமார் - அ.சோனியா,
  திரு. எஸ்.கோதண்டன் - கோ. வசுந்திரதேவி, சென்னை.

**கந்தசஷ்டித் திருவிழா சண்முகவிலாசம், திருக்கல்யாண மண்டபம் பூ அலங்காரம் உபயம்**

- திரு.எஸ்.பாலு (எ) பாலசுப்பிரமணியன், கும்பகோணம்.

**சிறப்புப் பணிஅலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உணவு உபயம்**

- திரு.எஸ்.ராமமூர்த்தி, தலைவர், சௌடாம்பிகா கல்வி குழுமம், திருச்சி.



**சூரனை இரு கூறாக்கி மயில் வாகனமாக, சேவல் கொடியாக ஆட்கொள்ளும் காட்சி**

**திருவிழா அழைப்பிதழ் உபயதாரர்**

தெய்வத்திரு. லவ்லி, திரு. சி. கடற்கரை அவர்கள், தொழிலதிபர், லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் தனியார் நிறுவனம், சிவகாசி.
திருவிழா சுவரொட்டி அழைப்பிதழ் உபயம் : திரு. தி. வெங்கடாசலபதி, ஸ்ரீ மகாலட்சுமி டிரேடிங் குரூப்ஸ், சிவகாசி.

இத்திருக்கோயில் பற்றிய விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய
இணையதளம் : www.tnhrce.gov.in
www.tiruchendurmurugan.hrce.tn.gov.in
மின் அஞ்சல் : jceotnv_38271.hrce@tn.gov.in

திருவிழாவில் கலந்து கொண்டு செந்திலாண்டவரின் அருள் பெற அன்புடன் அழைக்கின்றோம் !
இவண் : திருக்கோயில் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள்.

**பிளாஸ்டிக்கை தவிர்ப்பீர் ! சுற்றுச்சூழலை பாதுகாப்பீர் !!**



திருச்சீரலைவாய், சூரசம்ஹாரம் - திருக்காட்சி